1970 செப்டம்பர் 1]

சாத்தான் குளம் தொகுதியில் மத்திய சமையற் கூடம்

* 165 வினா—திரு. டி. மார்டின் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், சாத்தான்குளம் தொகுதியில் " கேர் " நிறுவன உதவியுடன் மத்திய சமையற்கூடம் அமைக்கும் செயற் குறிப்பு ஏதேனும் தமிழக அரசின் பரிசீலனையில் தற்சமயம் உள்ளதா?

(இ) ஆம் எனின், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. டி. மார்டின் : தலைவர் அவர்களே, அனேக பள்ளிக்கூடங்களில் பணிபுரிகின்ற ஆசிரியர்கள் பல மைல் தூரம் நடந்து வகுப்புகளுக்கு வரவேண்டிய நிலை இருக்கிறது. போக்குவரத்து சாதனங்கள் இல்லாத இடங்களில் அவர்கள் இந்த விதமாக மத்திய உணவு தயாரிப்பதில் மிகவும் சங்கடமான நிலையில் இருக்கிறார்கள் என்பது குறித்து அரசாங்கத்திற்கு பல முகாம்களிலிருந்து தகவல் வந்திருக்கும். இந்த விதமான இடங்களில் ஒரு பொது சமையல் கூடத்தை ஏற்படுத்தி ஆசிரியர்களுடைய கஷ்டத்தைப் போக்க ஒரு நடவடிக்கை எடுக்க முடியுமா? அதற்கான தாக்கீது அரசு அனுப்புமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மதிய உணவு சமைத்து மாணவர்களுக்கு இடுகின்றதில் இருக்கும் சங்கடங்களைப் போக்கத்தான் இந்த மைய சமையற்கூடத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. அதற்கு அமெரிக்காவின் " கேர் " நிறுவனம் பெருமளவில் உதவி செய்ய முன்வந்திருப்பது மிக மிக மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். இந்தச் சங்கடங்களை ஒரு முறையான திட்டத்தின் அடிப்படையில்தான் மெல்ல மெல்லப் போக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அதற்காக ஒரு மைய உணவுக் கூடம் அமைப்பதற்காக " கேர் " நிறுவனம் இரண்டு லட்ச ரூபாய் தருகிறார்கள். கட்டடம் கட்ட, கருவிகள் வாங்க, பாத்திரங்கள் வாங்க, அதற்குத் தேவைப்படும் இரண்டு 'வேன்'கள், உணவுப் பொருட்களை எடுத்துச்செல்வதற்கான வாளிகள் ஆகியவற்றுக்காக இரண்டு லட்ச ரூபாய் தொடராக் கடனாக அவர்கள் தருகிறார்கள். அரசு 17 ஆயிரம் ரூபாய் தொடரும் செலவாக ஒவ்வொரு மைய உணவுக்கூடத்திற்கும் செலவழிக்க வேண்டியிருக்கிறது. 1969–1970 ஆம் ஆண்டில் 30 சமையற் கூடங்களில் செங்கற்பட்டு மாவட்டத்தில் 27 ஒன்றியங்களிலும், வடார்க்காடு மாவட்டத்தில் மூன்று ஒன்றியங்களிலும் மேற்கொண்டுள்ளார்கள். இந்த ஆண்டு 66 மையக் கூடங்களை எடுத்துக்கொள்ளுகிறார்கள். வடார்க்காடு, தென்னார்க்காடு மாவட்டங்களிலிருக்கும் ஒன்றியங்களில் நிறுவுவதாக இருக்கிறார்கள். ஆகவே, படிப்படியாக எடுத்துக்கொண்டு வைக்கும் முயற்சியில் " கேர் " நிறுவனத்தார் இருக்கிறார்கள். நான் கூட, ஒரு மாவட்டத்தில் சிலபல இடங்களை எடுத்துச் செய்யலாம் என்று யோசனை சொன்னபோது, அதைக் கட்டுவதற்காக இருக்கிற ஏற்பாடு

களையெல்லாம் மாவட்டத்திற்கு மாவட்டம் நகர்த்துவது என்பது கடினமானது, ஆகவே, செங்கற்பட்டு, வடார்க்காடு மாவட்டங்களை முதலில் எடுத்துக்கொண்டு பிறகு ஒவ்வொரு மாவட்டமாக இரண்டு மூன்று ஆண்டுகளில் 374 ஒன்றியங்களிலும் இந்த மைய சமையற் கூடம் வைக்க எல்லா ஏற்பாடுகளும் செய்யப்படும் என்றும், ஆனால், ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தில் பல சமையற்கூடங்கள் கட்டுவதற்கு சாமான்கள், மற்றவைகளெல்லாம் கிடைப்பதற்கு வாய்ப்பு இருந்தால்தான், போக்குவரத்தை மிக எளிதாக்கி அவற்றை முடிக்க முடியும் என்று கருதுவதால் 66 மைய சமையற் கூடங்களை இந்த ஆண்டு எடுத்துக் கொள்ளுகிறார்கள். அதற்கு அடுத்த ஆண்டு அதிகமான மைய சமையற் கூடங்களை எடுத்துக் கொள்ளுவதாகக் கூறுவதால் அந்த நிலைமை வரும்போது திருநெல்வேலியில் சாத்தான்குள ஊராட்சி ஒன்றியமும் கவனிக்கப்படும். அதுவரையில் இப்பொழுதிருக்கும் முயற்சிகள்தான் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் 166, 167, 168 இவைகள் பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

Aerial Spraying Schools.

* 169 *Q.*—THIRU K. CHEEMAICHAMY: Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(*a*) whether there is any proposal to start aerial spraying schools at Coimbatore and Madurai Agricultural Colleges during 1970-71; and

(*b*) if so, the financial implications involved for the proposal?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) கோயம்புத்தூரிலுள்ள வேளாண்மைக் கல்லூரியில் மட்டும் விமான மூலம் மருந்து தெளிக்கும் பயிற்சிப்பள்ளி ஒன்றைத் தொடங்குவதற் குரிய செயற்குறிப்பை வேளாண்மைத் துறை இயக்குநர் அனுப்பி யுள்ளார். அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

(இ) 1970–71 முதல் 4 ஆண்டுகளுக்காகும் செலவினங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன—

	ரூ.
பணியாளர் சம்பளமும், படிகளும்	6,68,500
தொடர் இன சில்லரைச் செலவுகள்	2,97,400
விமானங்கள் ஹெலிகாப்டர்கள் மற்றும் பிற சாதனங்கள் வாங்குவது தொடர்பான தொடரா இனச் செலவு.	25,35,000
மொத்தம் ..	35,00,900

மேற்படி தொகையில், ரூ. 20 லட்சம் அந்நியச் செலாவணியும் அடங்கும்.